# அருள் ஒளி



"நவராத்திரி சிறப்பு மலர்"

2003

வெளியீடு :
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை
இலங்கை.

மலர்
14

புரட்டாதி
மாத இதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



# அருள் ஒளி

(மாதாந்த சஞ்சிகை)

ஆசிரியர்:
செஞ்சொற்செல்வர்
**திரு. ஆறு. திருமுருகன் அவர்கள்**

உதவி ஆசிரியர்:
**சைவத்திரு கா. சிவபாலன் அவர்கள்**

2003 சுபானு வருடம் புரட்டாதி மாதம்

வெளியீடு: ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை, இலங்கை.

மலர் **14**

## யார்க்கெடுத்துரைப்போம்?

கடந்த இருமாத காலங்களில் யாழ்ப்பாணத்தில் பல திருக்கோயில் கருவறையில் மூலவர் விக்கிரகங்களைப் பெயர்த்து அதன் அடியில் இருக்கும் ஐம்பொன்னை நவரத்தினங்களைத் திருடும் கொடுமை நிகழ்ந்து கொண்டு இருக்கிறது. சில ஆலயங்களில் எழுந்தருளி விக்கிரகங்கள் சில காணாமல் போயுள்ளன. பல திருக்கோயில்களில் அழகிய சித்திரத்தேரில் செதுக்கப்பட்ட சிற்பங்கள் களவாடப்பட்டு வருகின்றன. இக்கொடுமையைச் செய்பவர்கள் யார்? கடவுளின் சந்நிதானத்தில் கூசாமல் சென்று தொடர்ந்து திருடும் கூட்டம் எதிர்காலத்தில் எத்தகைய துன்பத்தை அனுபவிக்கப் போகிறதோ தெரியவில்லை. இக்கொடுமையை யார்க்கெடுத்துரைப்போம்.? முன்னூறு வருடம் பழமை மிக்க பறாளை விநாயகர் ஆலயத் தேரில் பல நுட்பமான சிற்ப விக்கிரகங்கள் முறித்து எடுக்கப்பட்டது தொடர்பாக பத்திரிகைகளில் பலரும் கவலை தெரிவித்தனர், எனினும் பயன் இல்லை. சண்டிலிப்பாய் ஐயனார் கோயில், நவாலி அட்டகிரி கந்தசுவாமி கோயில், இணுவில் காரைக்கால் சிவன் கோயில், உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் கோயில் எனத் தொடர்ந்து பல கோயில்களில் நூற்றுக்கு மேற்பட்ட அழகிய தேர்ச்சிற்பங்கள் திருடப்பட்டது வேதனைக்குரிய விடயமாகும். சில ஆலயங்களில் தேர்த்திருவிழாவுக்கு இருநாள்களுக்கு முன்பு தேர் இருப்பிடக் கொட்டகையை திறந்து பார்த்த போதே தேர்ச்சிற்பங்கள் திருட்டுப் போனதை அறங்காவலர்கள் அறியக்கூடியதாக இருந்தது. எனவே இன்னும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனை தேர்கள் மூடிய நிலையில் திருட்டுக்குட்பட்டுள்ளன என்பது யார்க்குத் தெரியும். சைவசமய நிறுவனங்கள் இது பற்றி யாதும் பேசாது இருப்பது வேதனைக்குரியது. கருவறைகளில் பெயர்க்கப்பட்ட திருவுருவங்களை மீண்டும் பிராயச்சித்தம் செய்து இருத்துவதோடு எம்பணி முடிவடைந்து விடுவதாகக் கருதக்கூடாது. நாம் விழிப்பாக இருக்க வேண்டும். புகழ்பூத்த அளவெட்டி கும்பிளாவளைப் பிள்ளையார் கோயிலிலும் திருடர் புகுந்து ஒரு தொகைப் பணத்தைச் சூறையாடியமை குறித்து பலரும் துன்பப்பட்டார்கள். அடுத்தடுத்து நடைபெறும் இத்கைய சம்பவங்கள் சைவ மக்களின் மனநிலையில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. பல இலட்சம் ரூபா செலவில் கோயில் திருப்பணிகளை நிறைவேற்றும் நாம் அவற்றைப் பாதுகாப்பதற்கும் தகுந்த ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். சில ஆலயங்களில் ஒலிபெருக்கிக் கருவிகள் கூட அண்மையில் களவாடப்பட்டதாக அறிகிறோம். அடியார்கள் தம் குலதெய்வங்களுக்கு நேர்த்தி செய்து கொடுத்த பொருட்களை தக்கமுறையில் பாதுகாக்க வேண்டியது ஆலய பரிபாலகர்கள், பூசகர்களின் தலையாய கடமையாகும். தெய்வச் சொத்துக்களை எவர் அபகரித்தாலும் அல்லலுறுவர் என்பது யாம் அறிந்த வரலாற்று உண்மை. கோவில்களில் நடைபெறும் திருட்டுக்களைத் தடுத்து நிறுத்த அனைவரும் கவனமெடுக்க வேண்டும். கோயில்களின் பெயரில் அர்த்தமற்ற வழக்குகள் நீதிமன்றில் தொடர்ந்து கொண்டு இருப்பதாக கௌரவ நீதிபதிகள் சிவத்தமிழ்ச்செல்வி அன்னையின் பிறந்ததின விழாவில் எடுத்துரைத்தமை குறிப்பிடத்தக்கது. எனவே கடவுளின் பெயரால் அர்த்தமற்ற முரண்பாடுகளைத் தொடராது ஒன்றுபட்டு வாழ்வதற்கு நாம் எம்மை ஆற்றுப்படுத்தல் அவசியமாகும். எமது சமயத்தின் மேன்மையை நாம் பாதுகாக்கத்தவறின் எம்மை நாமே இழந்தவர்களாகிவிடுவோம்.

-ஆசிரியர்

அருள் ஒளி - தகவற் களஞ்சியம்

## ஈழத்துச் சிதம்பரத்தில்

காரைநகர் திருக்கூத்தப் பெருமான் (ஈழத்துச் சிதம்பரம்) மகாகும்பாபிஷேகம் கார்த்திகைக்கு நடைபெற இருக்கின்றது. சென்ற மாதம் பாலஸ்தாபனம் செய்து ஐயனார் மூலஸ்தானம் திருப்பணி வேலைகள் சிறப்பாக நடைபெறுகிறது. அடியார்களின் வசதி கருதி பெரும் பணச்செலவில் யாத்திரிகர்மடம் ஒன்றும் கட்டப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

திருக்கையிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்,

**23ஆவது குருமகா சன்னிதானம்**

பரமாச்சாரிய , சீர் – வளர் – சீர்சிவப்பிரகாச தேசிக சுவாமிகள் அவர்கள்

**அம்பலவாண தம்பிரான் சுவாமிகள்**

வழங்கிய

# அருள் வாழ்த்துரை

இலங்கை தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம் மகோற்சவ விஞ்ஞாபனம் கண்டு மகிழ்ந்தோம்.

பூத்தவளே புவனம் பதினான்கையும் பூத்தவண்ணம் காக்கும் கருணைவடிவான சக்தியின் வடிவங்களில் ஒன்றாக விளங்கும் ஸ்ரீ துர்க்காதேவி மகோற்சவம் மிகச் சிறப்பாக நடத்தப்பெறுவது பாராட்டிற்குரியது.

இறைவனுக்கு பூசைகளும் விழாக்களும் முறையாக நடைபெறுதல் வேண்டும். அவ்வாறு நடைபெற நாட்டில் மழைவளம் குன்றாது. மன்னர்க்கும் தீங்கு நேராது. கள்வரால் துன்பம் ஏற்படாது. இவையாவும் நடைபெறாமல் இருந்தால் இன்னல்கள் தோன்றும் என்று திருமூலர் கூறுகின்றார்.

**"முன்னவார் கோயில்பூசைகள் முட்டிடின்**
**மன்னர்க்குத் தீங்குள வாரிவளங்குன்றுங்**
**கன்னங் களவு மிகுந்திடும் காசின**
**என்னரு நந்தி எடுத்துரைத்தேன்."** -என்பது திருமந்திரம்

ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம் நாடுநலம் பெற அம்பிகையின் விழாவினை சிறப்பாக நடத்தப்பெறுவது பாராட்டிற்குரியது.

ஸ்ரீதுர்க்காதேவி மகோற்சவம் சிறப்பாக நடந்தேற நமது வழிபாடு கடவுளாகிய அருள்மிகு ஞானப்பெருங்கூத்தன் திருவடி மலர்களைச் சிந்தித்து வாழ்த்துகின்றோம்

**"மன்னுக தில்லை வளர்க நம் பக்தர்கள்"**

இத்துடன் திருநீற்றுச் செல்வம் எழுந்தருளி வருகின்றது. அணிந்தும் அணிவித்தும் மகிழ்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சக்தி தகவல்கள் சில

## சக்தியின் அம்சங்கள்

குரு முகமாக உபதேசம் பெற்றுச் சக்தியை பஹிர்முகமாக வழிபடுவோர் கீழே குறிப்பிட்டுள்ள தேவியின் ஐந்து முக்கிய அம்சங்களின் மூலமாக அடைகின்றனர்.

1. ஸ்ரீ ராஜேஸ்வரி 2. பாலை 3. புவனேச்வரி 4. லலிதா 5. துர்க்கை

## சக்தி பீடங்கள் ஐம்பத்து ஒன்றாகும் அவைகளில் சில

வாரணாசி, நேபாளம், கைலாசம், கேதாரம், ஓங்காரம், ஹரித்வார், உஜ்ஜயினி, ஹஸ்தினாபுரம், கான்ய குப்ஜம், காஞ்சி என்பவையாகும். மந்த்ர சாஸ்திரத்தின் ஐம்பத்தொரு அட்சரங்களுமே ஐம்பத்தொரு சக்தி பீடங்களாக விளங்குவதால் தேவீ மந்த்ர ஸ்வரூபிணியாகவே விளங்குகிறாள்.

சக்தி பீடங்கள் அறுபத்து நான்கு என்றும் நூற்றி எட்டு என்றும் கூறுவாரும் உளர். தேவி பாகவதத்தில் வியாசர் குறிப்பிடும் நூற்றி எட்டு பீடங்களின் பெயர்களும் தரப்பட்டுள்ளன.

## சக்தி அடியார்கள்.

ஆதிசங்கரர், ஸ்ரீபாஸ்கராயர், ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர், அபிராமிப்பட்டர், தாயுமானவர், முத்துத்தாண்டவர், முத்துஸ்வாமி தீக்ஷிதர், மூககவி, குரு நமசிவாயர், நமசிவாயர், இராமலிங்கர், காளமேகம், காளிதாசன், கம்பன் முதலியோர்.

## சக்தி விரதங்கள்

கேதார கெளரீ விரதம், நவராத்திரி விரதம், வரலக்சுமி விரதம், கருட பஞ்சமி விரதம், சாவித்திரீ விரதம், மங்கள கெளரீ விரதம், ஸ்வர்ண கெளரீ விரதம், காரடை நோன்பு,(காமாட்சி நோன்பு), யமுனா விரதம், ரிஷி பஞ்சமி விரதம், லக்ஸ்மி குபேர விரதம், உமா சுக்கிர வார விரதம், ரோஹிணி விரதம் முதலியன.

## சக்தியின் வடிவங்கள்

பரை, பஸ்யந்தி, மத்யமா, வைகரீ, சுரபி, ராதிகாதேவி, வசுதாதேவி, மாயாதேவி, வாராஹிதேவி, ஸ்ரீ மஹா ப்ரத்தியங்கிரா தேவி, சாமுண்டி, இரக்த நந்தி, பீமை, மூகாம்பிகை

## ஐந்து சக்திகள்

துர்க்காதேவி, லக்ஷ்மிதேவி, ஸரஸ்வதி தேவி, சாவித்திரி தேவி, ராதா தேவி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானம்பெற தட்சணாமூர்த்தியை வழிபடுவோம்

~ கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள்

சைவத்தின் முழுமுதற் கடவுளாகிய சிவபெருமான் குருவாக எழுந்தருளுகின்ற முகூர்த்தமே தட்சிணாமூர்த்தி ஆகும். அவர் தென்திசை நோக்கி அமர்ந்திருப்பதால் தென்முகக் கடவுள் என அழைக்கப்படுகிறார். இந்த மூர்த்தியே உயிர்கள் அனைததிற்கும் மிக மேலான ஞானத்தை உபதேசித்து, மலநீக்கம் பெற்று இறைவனோடு இணைவதான உயர்நிலையை அடைய அருள்செய்பவர் என்று சைவசமயம் கூறுகிறது. "மோனம் என்பது ஞானவரம்பு" என்பர். எப்பொழுதும் மோனநிலையில் ஆழ்ந்து வீற்றிருப்பவர் தட்சிணாமூர்த்தி. உபதேசத்தையும் மோனநிலையில் சின்முத்திரை காட்டுவதன்மூலம் செய்பவர். அங்கு பேச்சுக்கு இடமில்லை. எங்கும் மௌனம்; எல்லாம் மௌனம்; எதிலும் மௌனம்; எப்பொழுதும் மௌனம்; ஆனால் ஞானோபதேசம் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. ஞானம் நிரம்ப உள்ளவர்கள் அதிகம் பேசிக் கொள்ளமாட்டார்கள். அதிகம் தங்களை அலட்டிக் கொள்ளார்கள்; தர்க்கிக்கவும் மாட்டார்கள். நிறைகுடம் தழும்பாது. பரம்பொருளே குருவாக வந்து, குரு இலட்சணம் எவ்வாறு அமையவேண்டு மென்பதற்கு வழிகாட்டியுள்ளார். இறைவனின் குரு அம்சமே தட்சிணாமூர்த்தி. ஆலயங்களில் கருவறைச் சுவரின் வெளிப்புறத்தில் அமைக்கப்பட்டுள்ள மாடத்தில் தட்சிணாமூர்த்தி எழுந்தருளியிருப்பதைக் காணலாம்.

சாதாசிவ மூர்த்திக்கு ஐந்து முகங்கள் உண்டு. தெற்கு நோக்கிய உருவத்திற்கு அகோரமூர்த்தம் என்று பெயர். அம்மூர்த்தியே தட்சிணாமூர்த்தியாகும். தட்சிணாமூர்த்தி கல் ஆல விருட்சத்தின் அடியில் அமைந்துள்ளார் என்று புராணவரலாறு கூறும். அவர் சாந்தமும் பரஞானமும் உருவெடுத்தாற்போன்று விளங்குகிறார். மனம், வாக்குக்கு எட்டாத பேரறிவும் பேரானந்தமும் நிறைந்த பெருநிலை அது.

தட்சிணாமூர்த்தி தமது இடது காலை மடக்கி வலது முழங்காலில் படும்படி வைத்திருக்கிறார். அவரின் நான்கு கரங்கள் ஒன்றில் சின்முத்திரையும், மற்றதில் கோடரியையும்; இன்னொன்றில் மானையும், மற்றொன்றில் சிவஞான நூலையும் தரித்தவராகக் காட்சியளிக்கின்றார்.

"முன்னைப்பழம் பொருட்கும் முன்னைப்பழம் பொருளே, பின்னைப்புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியனே என மாணிக்கவாசகர் இறைவனை விழிக்கின்றார்.

குன்றாத இளமையும், குறைவிலா நிறைவும் கொண்டு பரிபூரணப் பொருளாக வீற்றிருக்கும் தட்சிணாமூர்த்தி, மாணிக்கவாசக சுவாமிகளின் கூற்றினை எடுத்துக் காட்டுவதாக உள்ளார். இறைவனின் பூரணத்துவத்தையும், அவன் கால, தேச, வர்த்தமானங்களினால் பாதிக்கப்படாதவன் என்பதையும் எடுத்து விளக்குகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தட்சிணாமூர்த்திக்கு முன்னால் முனிவர்கள் அமர்ந்திருந்து ஞானோபதேசம் பெறுங்காட்சியையும் காணலாம் ஜீவனின் பிறப்பு இறப்பு என்னும் நீண்ட பயணத்தொடர் முடிவு பெறவேண்டிய கடைசிக்கோடு, பரஞான வடிவமாக விளங்கும் தட்சிணாமூர்த்தியின் திருச்சன்னிதியிலே எனப் பெரியோர் கூறுவர்.

"சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி நமையாளும் அத்தன்" என அழைக்கப் படுபவரே தட்சிணாமூர்த்தியாக எழுந்தருளியுள்ளார். வேதம், ஆகமம், சாஸ்திரங்கள் மற்றும் கலைகள் அனைத்தும் கற்றுத் தேர்ந்த சனகாதிமுனிவர்கள், தட்சிணாமூர்த்தியின் ஞானஒளி பெற்றே மயக்கந்தெளிந்தே பரஞானத்தை அடையுந்தகுதி பெற்றனர்.

தட்சிணாமூர்த்தியின் வலதுகைப் பெருவிரல் ஆள்காட்டி விரலைச் சேர்த்தும், மற்ற மூன்று விரல்களைத் தனியே ஒன்று சேர்த்து நிற்கும்படியான நிலையினைக் கொண்டும் உள்ள சின்முத்திரை ஓர் உண்மையை எடுத்துக் காட்டுகிறது. ஒன்றாய் நிமிர்ந்து நிற்கும் மூன்று விரல்களும் ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களைக் குறிக்கும். ஆள்காட்டி விரல் ஆன்மாவையும் பெருவிரல் இறைவனையும் குறிக்கின்றது. மும்மலங்களினாலும் கட்டுண்டு பிறப்பு இறப்புச் சூழலில் அகப்பட்டிருக்கும் ஆன்மா, பதியாகிய சிவத்தின் கருணையினால், மும்மலங்களில் இருந்தும் விடுவிக்கப்பட்டு சிவத்துடன் இணைவதைச் சின்முத்திரை விளக்குகிறது என்று சைவசித்தாந்தம் கூறுகிறது. மலங்களுடன் சேர்ந்திருக்கும்வரை துன்பம்தான். அவற்றை விட்டு விலகிச் சிவத்துடன் இணைந்துவிட்டால் பேரின்பமே. எல்லாவற்றிற்கும் இறைவனின் திருவருளே தேவை. திருவருட்துணை இருந்தாலே யாவும் கைகூடும். சங்கிலித் தொடராக வரும் வினைகளை வேரறுத்து பேரின்பத்தை உயிர்களுக்கு வழுங்குவதற்கு யோகானுபவம் பொருந்தியவராக ஞானநிஷ்டையில் தட்சிணாமூர்த்தி ஆழ்ந்து காணப்படுகிறார். நாமும் தட்சிணாமூர்த்தியை வணங்கி, ஞானத்தை அடைந்து உய்வுபெறுவோமாக.

## சமாதானம் நிலைத்திட அருள்வாயம்மா

தெல்நகரில் துர்க்காபுரத் திருவீதியிலே
தேவி துர்க்கை தேரில் வரும் காட்சிகாண
கல்விச் செல்வம் தேடும் பள்ளி மாணவர் நாம்
காலைப் பொழுதினிலே களிப்போடு ஓடி வந்தோம்
நல்வித்தை யாவும் கற்று நானிலத்தில் நலமாய் வாழ
நாடி வந்தோம் உன்னருளை தேரில் வரும் தேவியே
பொல்லாத போர் இம்மண்ணில் இனி வேண்டாம்
பொன்னான சமாதானம் நிலைத்திட அருள்வாயம்மா.

ப. நீரஜா - தரம்-5'பி' யா/ஏழாலை மேற்கு சைவசன்மார்க்க வித்தியாசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சக்தி வழிபாடு

- சரசாலை, **க. சிவசங்கரநாதன்**

தாய்வழி பிறப்பான உயிர்கள். பெற்றுத் தருபவள் தாய். உயிர்களை மட்டுமா? நாம் காணும் உலகம் கண்ணுக்கெட்டாத வரை பரந்து விரிந்த அண்டம் யாவையும் பெற்றது யார்? படைத்தது யார்? இவை எப்படி தோன்றின. அலைபாயும் கடல் வானுயர் மலை உயிர்தரும் காற்று எல்லை காணா ஆகாயம் சுட்டெரிக்கும் தீ யாவற்றையும் தோற்றுவித்தவர் யார்? வண்ண வண்ண செடிகள் மயக்கும் மணம் தரும் மலர்கள் சுவைதரும் பழங்கள் வனப்புமிகு இயற்கையின் எழில் கொஞ்சும் பறவைகள் வியப்பூட்டும் நீர்வாழ்வன. விந்தைமிகு நிலம் வாழ்வன இவற்றை இணைத்துத் தோற்றுவித்த சக்தி எது?

சூரியன் சந்திரன் பூமி கோள்கள் யாவற்றின் தோற்றமும் அசைவும் இயக்கமும் நடைபெற மூலமான சக்தி எது. உயிர்கட்கு தாய் போல அண்டத்துக்கும் தாயானவளே சக்தி. நம் சிற்றறிவிற்கு அப்பாற்பட்ட பரம்பொருளின் சக்தியே உலகின் தாய். அளவற்ற அன்பு எல்லையற்ற கருணை தொடர்ச்சியான இடையீடற்ற இயக்கம் இவை தான் பரம்பொருளின் சக்தி.

இந்த அன்னையின் வழிபாடே சக்தி வழிபாடு அறிவுநிலை சிவன் எனில் இயக்கநிலை சக்தியாம். சிவம் வேறு சக்தி வேறு அல்ல. சொல்லும் பொருளும் போல தீயும் வெப்பமும் போலச் சிவனும் சக்தியும் வேறறக் கலந்து நிற்பவர்கள்

**சத்தன் அருள் தரின்**
**சத்தி அருளுண்டாம்**
**சத்தி அருள தரின்**
**சத்தன் அருளுண்டாம்**

-திருமூலர் திருமந்திரம்

சிவன் தந்தை எனில் சக்தியே தாய்-இப்படி இணைந்து நோக்கி வழிபடுதலே மரபு.

**ஈன்றாளுமாய் எனக்கெந்தையுமாய்**
**தாயனைத் தவமான தன்மையானை**

-அப்பர்

**தாயாகி என்னை வளர்த்தனை போற்றி**

-மாணிக்கவாசகர்

**தாயாகித் தந்தையுமாய்த் தாங்குகின்ற எனது தெய்வம்**

(வள்ளலார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு பரம்பொருளையும் சக்தியையும் வழிபடும் மரபு தொன்றுதொட்டு உள்ளதாகும். உலகின் அன்னையே சக்தி அவளே அனைத்தின் தோற்றத்துக்கும் காரணி என்ற கொள்கை உலகின் பல பாகங்களிலும் ஏற்றுக் கொள்ளப்பெற்றதாகும்

. "சிந்துச்சமவெளியின் அகழ்வாராய்ச்சிகளில் சக்தியின் வடிவங்கள் பெறப்பட்டன. நாலாயிரம் வருடங்கட்கு முற்பட்ட காலத்து மக்கள் அன்னை வழிபாட்டை மேற்கொண்டதற்கு இவை ஆதாரங்களாகும்.

பண்டைய நாகரீகங்கள் பலவற்றில் சக்தி வழிபாடு இடம்பெற்றுள்ளதை அகழ்வாய்வாளர் வரலாறு புனைவோர் தெளிவாகக் கூறியுள்ளனர். அங்கெல்லாம் சக்தியின் உருவச்சிலைகள் கண்டெடுக்கப்பெற்றுள்ளன. இருக்கு வேதத்தில் பெண் தெய்வங்கள் குறிப்புக்கள் உண்டு. **தேவி சூக்தம்** என்ற பகுதியில் உஷஸ், இராத்ரி, அதிதி,வாசி,புரங்கி, ஈளா, வாருணி, ஆகிய பெண் தெய்வங்கள் பற்றிக் கூறப்பட்டுள்ளன. இதனால் அறியப்படுவது என்ன? சக்தி வழிபாடு வேதகாலத்துக்கு முன்பே இருந்தது என்பதாம்.

பக்தர்கள் சக்தியை பல்வேறு வடிவங்களில் காண்கின்றனர். மாரியம்மன் வழிபாடு ஒருபுறம் காளி ஆத்தாள் வழிபாடு ஒருபுறம் கண்ணகி அம்மன் வழிபாடு ஒருபுறம். உலகநாயகி வழிபாடு ஒருபுறம். நகரமாயிலென் சிற்றூராயிலென் அங்கெல்லாம் அம்மன் கோவில்கள் அமைந்துள்ளன. அன்னை தான் பராசக்தி அவளே ஆதிசக்தி அவள் அருளால் உலகில் நன்மைகள் நிகழ்கின்றன. நோய் தீர்ப்பவள் அவளே. வினைபோக்குபவள் அவளே. தனம் தருவாள். தளர்வறியா மனம் தருவாள் நல்லன எல்லாம் தருவாள்.

அறியாமல் செய்த பிழைகள் பொறுப்பாள் பால் நினைந்தூட்டும் தாயாகி பிறந்தோர் எய்தும் பயன்களாகிய அறம் பொருள் இன்பம் வீடு அனைத்தையும் தருவாள், சக்தி இன்றிச் சிவன் இல்லை எனத் தனது சௌந்தர்யலகரியில் சக்தியின் மகிமையைக்கூறிய ஆதி சங்கரர் தன்னை உண்மையாக வழிபடுவோருக்கு சகல செல்வங்களும் யோகங்களும் பெருவாழ்வும் அளிக்கிறாள் அன்னை எனக்கூறியுள்ளார். சக்திவழிபாடு இன்றைய காலகட்டத்தில் வளர்ச்சிபெற்றதற்கு நாட்டில் உள்ள அம்மன் ஆலயங்கள் காட்சியளிக்கின்றன. அன்னையின் வடிவங்கள் மேற்படி ஆலயங்களின் இராச கோபுரங்களில் அழகாக வடிவமைக்கப்பட்டுள்ளது. சக்தி வழிபாட்டிற்கு புரட்டாதி மாதம் சிறப்பு பெறுகிறது. நவராத்திரி காலத்தில் அன்னை பராசக்தியை வழிபட்டு அன்னை திருவருள் பெற்று வாழ்வோமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள்மிகு தருந்தினம் நவராத்திரி

கவி ஆக்கம்: **சு. குகதேவன்**

**தெல்லிப்பழை**

**எடுப்பு**

மலைமகள் அலைமகள் கலைமகள் திருவருள்

நிலைபெற வருந்தினம் நவராத்திரி

**தொடுப்பு**

மனைவளம் பெருக்கியே வருந்துயர் அகன்றிட

வினைநலம் தருந்தினம் நவராத்திரி

முடிப்பு (மலைமகள் துதி)

வாழ்வு மணம்பெற வழங்கிடும் இன்னருள்

தாழ்வு நிலைகெடத் தந்திடும் நெஞ்சுரம்

ஏழ்புவி மீதிலுன் எழில்நடம் கூட்டியே

தாழ்வற நல்லொளி நல்கிடும் துர்க்கையே

**திருமகள் துதி**

மாயவன் தேவியே மாதுநா ராயணி

ஆயது யர்கெட அகம்நிறைந் தொளிதரும்

தாயவள் உனதடி மலரினைப் பணிந்திட

தூயநல் அருளொளி துலங்கிட வேயருள்

**கலைமகள் துதி**

காசினி மீதொளி கூட்டும் கலைமகள்

கருணை மிகுநெறி ஞானம் தோங்கியே

மாசிலா வண்ணமில் மண்ணிடை வளம்பெற

மனங்கசிந் தேயருள் நல்கிடும் வாணியே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிறுவர் விருந்து**

# விலகுவது யார்?

- சகோதரி யதீஸ்வரி

குருவாயூர்க் கிருஷ்ணன் கோயிலிலே ஒரு யானை இருக்கிறது. விசேட உற்சவங்களில் சுவாமி ஊர்வலம் போவது இந்த யானைமேல் இருந்துதான். மற்ற நேரங்களில் கோயில் வாசலில் அதைக் கட்டி வைத்திருப்பார்கள். வரும் பக்தர்கள் அதனிடம் ஆசி பெறுவார்கள். சிறு குழந்தைகளை அந்த யானை மிக மென்மையாக வருடி ஆசீர்வதிக்கும். பழம், தேங்காய், கரும்புத்துண்டுகள் அதற்குக் கொடுப்பவர்கள் பலர்.

அந்த யானை காலை நேரத்தில் அருகில் ஓடும் ஆலப்புழை நதிக்குப் போகும். பாகன் பேருக்குத்தான் அதனுடன் போவான். மற்றப்படி யானை வெகு கவனமாக, இயல்பாக ஆற்றுக்குப் போய் நீரில் படுத்துப் புரண்டு ஆனந்தமாகக் குளித்துவிட்டு வரும். வெய்யில் காலங்களில் பின்னேரமும் அது ஆற்றில் போய் குளித்துவிட்டு வரும்.

வெய்யில் காலத்துப் பிற்பகல் ஒன்றில் இந்த யானை ஆற்றில் குளித்துவிட்டு கோயிலுக்கு வந்து கொண்டிருந்தது. அப்போது ஆற்றங்கரையில் சேற்றில் புரண்டு உருண்டு விளையாடிய பன்றி ஒன்று யானைக்குப் பின்னால் ஓடி வந்தது.

உடல் பருத்த பன்றியின் உடல் முழுவதும் சேறு. அது ஓடிவரும் வேகத்தில் உடல் குலுங்க, சேறு நாலாபுறமும் விசிறி அடிக்கிறது. முன்னாலே போய்க்கொண்டிருந்த யானை தற்செயலாய்த் திரும்பிப் பார்த்தது.

பன்றி வருகிற வேகத்தையும், அதன் உடம்பிலிருந்து சிதறும் சேற்றையும் கண்டது யானை. "அது நம் அருகில் வந்தால், சேறு நம்மீதும் படுமே. சுத்தமாகக் குளித்துவிட்டு கோயிலுக்குப் போகிற நம்மீது சேறு பட்டால்........... மீண்டும் குளிக்க வேண்டும். நேரமோ ஆகிவிட்டது........" என்று நினைத்த யானை, "பன்றி அருகில் வருமுன் ஓடிப்போய் விடலாம்" என நினைத்து விரைந்து ஓடியது. ஓடும்போது பன்றி அருகில் வந்து விட்டதா என்று திரும்பிப் பார்த்துப் பார்த்து ஓடியது.

"அட்டா! இந்தப் பெரிய யானை என்னைப் பார்த்தல்லவா பயந்து ஓடுகிறது!" என்று பன்றி நினைத்துக் கொண்டது. மறுநாளும் இப்படி பன்றி துரத்த யானை வேக வேகமாக ஓடியது. அடுத்த நாளும் அப்படியே நடந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஹா! ஹா! ஹா! என்னைப் பார்த்து துரத்த இந்த யானை நல்லாவே பயந்து ஓடுகிறதே! " என்று சிரி சிரியென்று சிரித்து மகிழ்ந்தது பன்றி.

"இந்த அருவெறுப்பிற்குரிய பிராணி உதறும் சேறு நம்மீது பட்டுவிடாமல் நாம் தானே நம்மைக் காத்துக்கொள்ள வேண்டும். இதனிடமிருந்து எவ்வளவு தூரம் விலகிப்போக முடியுமோ, அவ்வளவு தூரம் விலகிப்போவது நமக்குத்தான் நன்மை! " என்று நினைத்துக்கொண்டது அந்தக் கோயில் யானை.

ஆமாம் தீயவனைக் கண்டால் நல்லோர் விலகிச் செல்வார்கள்.

---

## தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலயம்

வடபால் அமைந்துள்ள பிரசித்தி பெற்ற ஆலயங்களுள் இவ் ஆலயமும் ஒன்றாகும். அவள் தந்த ஆக்கம் இவ்வுலகமெல்லாம் என்ற அருள் வாக்கு இவ்வாலயத்தின் செயல்களிலும் சிந்தையிலும் எந்நேரமும் ஒலித்துக் கொண்டிருக்கிறது. அந்த திவ்விய ஒலியே இக்கோயிலையும் கோயிலை நம்பி வாழும் குடிமக்களையும் வாழவைத்துக் கொண்டிருக்கிறது எனலாம்.

1965ஆம் ஆண்டு ஆவணித்திங்கள் பூர்வபட்சத் திருவோண நட்சத்திரத்தில் குடமுழுக்கு விழா பக்தி பூர்வமாக நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து 1981ஆம் ஆண்டு மகாகும்பாபிஷேகம் அற்புதமாக நடாத்தப்பட்டது. இங்கு துர்க்காபுஷ்கரணி என்ற தீர்த்தத்தடாகம் நான்கு புறமும் 27 படிகள் கொண்டதாக தீர்த்தமண்டபத்தோடு அமைக்கப்பட்டது. இதன்பின்பு மக்கள் இடம்பெயர்வின் பின் 07-09-1997 ஞாயிற்றுக்கிழமை சுவாதி நட்சத்திரத்தில் குடமுழுக்கு நடைபெற்றது. இவ்வாறு நாளடைவில் விருத்தியடைந்து இன்று பிரசித்திபெற்ற ஒரு ஆலயமாக திகழ்கிறது.

ம. ரவிச்சந்திரன்
தரம் 5 'B' யாழ் / ஏழாலை மேற்கு சைவசன்மார்க்க வித்தியாசாலை

## தீர்வையருள்

- ஜெயஹேமலதா - தொட்டிலடி

மறையருள் புகழ் ஈழ
வள நாட்டின் - சைவ
இறையனார்க்குவந்த
காவல் தெய்வமாய் காங்கேசன்
துறை வீதி துர்க்காபுரமேவு
சுந்தரியே - தமிழர்

நிறையருள் தெய்வமாய்
திகழ் அன்னையே-இது
முறையோ இன்னுமெம் துயர்
தீரவில்லையே துர்க்கா
வினை திறன் மிகு தீர்வையருளி
திருவருளதனை தருவாயே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டுநகர் தந்த

# விபுலானந்தச் செம்மல் வாழ்க!

மட்டுநிகர் மட்டுநகர்த் தமிழகத்தின்
மாதின்யாள் கண்ணம்மை கருவுயிர்த்த
பொட்டுநிகர் புதல்வனாம் விபுலானந்தர்
பொதிகை வளர்தமிழ் கற்ற புலவனாய்
மொட்டுநிகர் ஆங்கிலமும் அயல்மொழிகள்
மொழிகின்ற பொருண்மைகளும் கற்றுத்தேறி
பட்டுநிகர் பளபளக்கும் உள்ளம் பெற்றே
பார்தனிலே தாயகத்தின் புகழ்பரப்பினாரே.

வட்டநிலா எறிக்கன்ற தண்ணளியும்
வண்டமிழின் செழுமையுமே பெற்றதனால்
பட்டமெலாம் அவரைத்தேடி வந்ததனால்
பாரினிலே அவர்பெரிய துறவியானார்
கட்டமெல்லாம் படுகின்ற தமிழினத்திற்
கருணைகொண்டே கடமைபல மேற்கொண்டார்
திட்டமெல்லாம் திலகநிகர் மங்கையரின்
திறமான கல்விக்காய்த் தீட்டினாரே.

விஞ்ஞானம் தெரிந்ததொரு மேதையானார்
வித்தகத்தால் இமயமென விளங்கினாலும்
மெய்ஞ்ஞானம் வாழ்வளிக்கும் எனத்தேர்ந்தே
மேன்மைமிகு இராமகிருஷ்ண மிசனைச்சேர்ந்தே
கைஞ்ஞானக் கைவல்ய நவநீதமுண்டும்
கைத்தலத்திற் பேனைதாங்கிக் கனத்தபல
விஞ்ஞான மெய்ஞ்ஞானக் கலவைசெய்தே
வியத்தகு ஏடுகளை இயற்றினாரே.

அன்னவரின் புகழ்வாழ்க புன்னகை வாழ்க
அருந்தவத்துத் துறவுடனே தூய்மை வாழ்க
தென்னவனாம் மயில்வாகனச் செம்மல் வாழ்க
தேசீயப் பற்றுடைய தேசிகனார் வாழ்க
சொன்னலமார் கவிதைகளும் சொற்பொழிவும் வாழ்க
சொர்ணமலர் சொன்னவர்தன் சொற்கள் வாழ்க
பொன்னவனாம் புகழத்தக்க புலவனார் வாழ்க
பொற்கதிரோன் போன்றவரின் பொற்பும் வாழ்கவே.

ஆக்கம்: **"ஆழ்கடலான்"**
**வல்லிபுரம் - புலோலி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சரஸ்வதி வழிபாடு

ஆயகலைகள் அறுபத்து நான்கினையும் உணர்விக்கும் தெய்வமாக விளங்குபவள் அன்னை சரஸ்வதி. ஞானங்களுக்கெல்லாம் இவளே நாயகி, வெள்ளைக் கலையுடுத்து புத்தி, கல்வி, வாக்கு ஆகியவைகளுக்குத் தலைவியாய் வெண்டாமரையில் எழுந்தருளி வீணை ஏந்திய கையுடன் வீற்றிருப்பாள். தன்னைப் போற்றுபவர்களின் அறியாமையை நீக்குவது இவளது கருணை, விளையாட்டு. இதனாலேயே அறிவினால் இயங்கும் நிலையங்கள் தோறும் அன்னைக்கு விழா எடுக்கப்படுகிறது.

இறைவனைத் தாயாக வணங்கும் பெருமை இந்து தர்மத்தின் சிறப்பை உணர்த்துவதாகும். அந்த உறவில் அமைதியும் ஆனந்தமும் பிறக்கிறது. இந்தப் பேரானந்த உறவைப் பலப்படுத்தும் நாட்கள் நவராத்திரி நாட்கள். இந்நாட்களில் சக்தி பூசையினால் மகிழ்ச்சியடைகிறது நம் நாடு. வீரம், செல்வம், கல்வி என்பவற்றாற் சிறப்புப் பெற்ற நாடு நம் நாடு. எல்லாவற்றுக்கும் முதல்வியாகிய சக்தி: கலைமகள், திருமகள், கொற்றவை என மூவராய் நிற்கிறாள். கலைமகளது திருவருளைப் பெற்றுக் கல்வியிற் சிறந்து விளங்கினோர் பலர். கவிச்சக்கரவர்த்தி கம்ப நாடாரும் கலைமகள் திருவருள் பெற்றே சிறப்புற்றார் எனக் கூறப்படுகிறது. குமரகுருபரர் சுவாமிகளும் கலைமகளருள் பெற்று மொகலாய மன்னனுடன் உரையாடிப் பெருமை பெற்றார்.

"பண்ணும் பரதமும் கல்வியும் தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்த நல்காய"

என்று கலைவாணியிடம் வேண்டி நிற்கிறா குமரகுருபரர். பாட்டுக்கொரு புல்வன் பாரதியும் பக்தியோடு பரவுகிறார்.

"வேதத் திருவிழியாள்-அதில்
மிக்கபல் லுரையெனும் கருமையிட்டாள்
சீதக் கதிர்மதியே-நுதல்
சிந்தனை யேகுழல் என்றுடையாள்
வாதந் தருக்கமெனும்-செவி
வாய்ந்தநற் துணிவெனும் தோடணிந்தாள்
போதமென் நாசியினாள்-நலம்
பொங்குபல் சாத்திர வாயுடையாள்
கற்பனைத் தேனிதழதள்-சுவைக்
காவிய மெனுமணிக் கொங்கையினாளவ"

எனப்பல வகையில் அன்னை கலைமகளின் திருவுருவை வர்ணிக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவராத்திரி இறுதி மூன்று தினங்களும் மகா சரஸ்வதிக்குப் பெருவிழா எடுக்கிறோம். ஏனெனில் இவளே பிரபஞ்சத்தை நிர்வாகம் செய்பவள். ஒவ்வொரு சிறுதுறையிலும் இறங்கி சக்திகளின் ஒத்துழைப்பைக் கூட்டி வைப்பது சரஸ்வதியின் கடமை.

மனித வாழ்க்கை என்ற வீணையை மீட்டிக் கொண்டிருக்கிறாள். அதைப் பேரின்பத்தோடு சுருதி சேர்க்கிறாள். நாம் அவளை விரும்பித் தியானம் செய்யும்போது அவள் வீணையொலி எம்முள் ஒலிக்கிறது. ஞானமும் வல்லமையும் எம்மிதயத்தில் இறங்குகிறது. அங்கிருந்து பூலோகத்துக்கு அவை பாய்ச்சப்படுகிறது. இதனால் விண்ணும் மண்ணும் இசைந்து காட்சி தருகிறது. இவற்றை அக அநுபவத்திற் கண்டுகொள்ள வேண்டும்.

கொழும்பு மருத்துவ பீடத்தின் இந்து சங்கச் சார்பில் கலைமகளுக்கு விழாவெடுப்பது போற்றுதற்குரியது. கலையைக் கடவுளாகக் கண்டவர்கள் எம்முன்னோர் அந்த அடிப்படையில் மருத்துவ மாணவர் உடற்பிணி, மனப்பிணி, உயிர்ப்பிணி மூன்றையும் அகற்ற வல்லுநராகப் பயிற்சி பெறல் வேண்டும். இதற்கு வழிகாட்டுவது தெய்வீக விழாக்களே என்பது வெளிப்படை. இவர்கள் ஞான மணங் கமழும் மலரொன்றினையும் வெளியிடவிருப்பது உவகைக்குரியது. எனவே இந்து மன்றத்தினைப் போற்றி அன்னை கலைவாணியின் அருளால் இவர்கள் சகல சிறப்பும் பெற வாழ்த்தி அமைகின்றேன்.

(வெளியீடு:- இந்துமன்றம், மருத்துவபீடம், கொழும்பு வளாகம், இலங்கைப் பல்கலைக்கழகம், கலைமகள் விழா மலர்-1978)

ஓம் சக்தி

**துர்க்கை அம்மா**

வரவேண்டும் வரவேண்டும் துர்க்கையம்மா
வந்து அருள் புரியவேண்டும் துர்க்கையம்மா
வாழ்வும் நீ தாழ்வும் நீ துர்க்கையம்மா
வாழ அருள் புரியவேண்டும் துர்க்கையம்மா
விக்கனங்கள் தீர்ப்பதற்கே துர்கையம்மா
விரைவாக வரவேண்டும் துர்க்கையம்மா
வீரத்தின் நாயகியே துர்க்கையம்மா
வீணர்களை அழித்திடுவாய் துர்க்கையம்மா
வையகத்தோர் வாழ்ந்திடவே துர்க்கையம்மா
கைதொழுது வணங்கிடுவேன் துர்க்கையம்மா

ஆக்கம்: இ.தீபிகா, தரம் - 5, சைவசன்மார்க்க வித்தியாசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# பண்டைய நாளில் பசுப்பேணலும் பெற்ற பயனும்

- சிவ சண்முகவடிவேல்

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமரன் நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

என்பது திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாருடைய எனதுரை இறைவன் தனதுரையாகத் தந்த திருவாக்கு. இத் தேவாரத்தை முதலாகவுடைய திருப்பதிகத்திற்குத் திருப்பாசுரம் என்று பெயர்.

"மாசுசே ரமண ரெல்லா மதியினின் மயங்கிக் கூற ஆசிலா நெறியிற் சேர்ந்த வரசனு மவரை விட்டுத் தேசுடைப் பிள்ளை யார்தன் திருக்குறிப் பதனை நோக்கப் பாசுரம் பாட லுற்றார் பரசம யங்கள் பாற" என்பது சேக்கிழாருடைய தெய்வ வாக்கு. பாசுரம் என்பது வாழ்க அந்தணர் என்னும் பதிகத்திற்குப் பதித்த சிறப்புப் பெயர். அப்பதிகத் திருக்கடைக் காப்பில் "பல்லார்க ளும்மதிக்கப் பாசுரம் சொன்ன பத்தும் வல்லார்கள்" என வருவதால் வாழ்க அந்தணர் பதிகத்திற்குப் 'பாசுரம்' என்னும் பெயரை பிரமபுர முனிவரே வழங்கியது கண்கூடு.

அந்தணர் வாழ்க, தேவர் வாழ்க-ஆனினம் வாழ்க இப்பூவுலகில் முன்னுரிமையில் வாழ்த்துவதற்குரிய அந்தணர் தேவரோடு-ஆனினமும் ஒப்ப வைத்து எண்ணப்படுவதால் ஆனினத்தின் அருமை அறிதற்குரியது. ஆனினம் அர்ச்சனை வழிபாட்டிற்குரியது என்னும் உண்மை உணர்த்தப்படுகின்றது.

அந்தணர் அமரரோடு ஆனினத்தையும் வாழ்த்திய வளத்தினால் வைகை ஆற்றில் ஓடு நீரைக் கிழித்து ஏடு எதிர்த்து ஓடியது. எனக் குறிக்கொள்வதனால் வரும் குறைபாடுளது எனக் கூறலாமா?

உலகில் எண்பத்து நான்கு இலட்ச பேதமாக உயிர்கள் படைக்கப்படும் என்பது சைவசமயக் கோட்பாடு. அவ்வுயிர்கள் ஓரறிவு முதலாக ஆறறிவு ஈறாக விளங்குவன. நான்கு வகையில் உற்பவிக்கும் அவை கருப்பை, முட்டை, வேர், கிழங்கு என்பன. ஏழு பிறப்புக்களைப் பெறுவன. அவை தேவர், மனிதர், நிற்பன, நடப்பன, ஊர்வன, பறப்பன, நீர் வாழ்வன ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவர் மானுடர் தவிர்ந்தஜவகைப் பிறப்பில் ஆவினம் ஒன்று. ஆ என்றால் பசு. பசு என்னும் பெயர்ச்சொல் நேரடியாக கோவைக் குறிக்கும். முப்பொருள் என்னும் போது பதி, பசு, பாசம் என்பர். பசு உயிர்வர்க்கத்தைச் சுட்டும்

பசுவின் ஆழ்ந்த பொறுமையையும் சாதுத்தன்மையையும் ஆன குணத்தைக் கண்டு, உயிரையும் பசு என்னும் பெயரிட்டு வழங்கினார் போலும். கண்ணிற்குப் புலனாகாத ஆன்மாவை காணும் கண்ணிற்குப் புலனாகும் பசு மூலம் புலப்படுத்துவதால் பசுவின் பெருமை பகர்வரிது.

பசுவைத் துன்புறுத்துவது உயிரை வருத்துவது போலாகும். பசுவைப் பேணுதல் ஆன்மாவில் அன்பு செய்வதற்கு ஒப்பாகும்.

முன்னொரு நாள் மன்னுயிர் புரந்தான் மனுநீதிச்சோழ மன்னன். அவன் ஆவின் மனம் அழியும் துயர் கண்டான். ஆவின் அவலம் அகற்ற வழி அறியாது அலமந்தான். தாய்ப்பசுவின் பேரிடர் தானும் தாங்குவதே தருமம் என்னும் பொருள் துணிந்தான். மன்னன் ஒரு மைந்தன் தன் குலத்துக்குரியான் என்பதும் உணரான், தன் மைந்தன் மீது தானே தேராழி உற ஊர்ந்தான்! தரணி காவலன் ஆவின் மேல்வைத்த ஆதரவு தான் என்னே! பசுவின் பெருமை தான் என்னே!! பசுப் பேணும் பார்த்திபன் பண்பு தான் என்னே!

பசுவின் படுதுயர் பாற்றிய பண்பால் அல்லவா, விண்ணவர்க்கும் வெளிப்படாத வீதி விடங்கப் பெருமான் மண்ணவர் கண்மழை பொழிய விண்ணவர் பூமழை சொரிய அண்ணலவன் கண்ணெதிரே அணிவீதி மழவிடை மேல் வெளிநின்றார்.

முன்னவனே முன்நின்றதால் முடியாத பொருள் யாவும் இன்னிதாய் நிறைவெய்தியது. மணிமேகலை என்னும் காப்பிய நூல் பசுவின் பலன் கருதாப் பண்பினை மணி மணியான வார்த்தைகளால் அணிசெய்யும்.

பசு பயனற்ற நிலத்தில் பயிராக வளரும் புல் மேய்கின்றது. பூமியிலுள்ள மானுடர்க்கெல்லாம் தனது இனிய தீம்பாலை அறத்தோடு கூடிய நெஞ்சங் கொண்டு அருள் சுரந்து ஊட்டுகின்றது.

“விடுநில மருங்கிற் படுபுல் லார்ந்து
நெடுநில மருங்கின் மக்கட் கெல்லாம்
பிறந்தநாட் டொட்டுடுஞ் சிறந்ததன் தீம்பால்
அறந்தரு நெஞ்சோ டருள்சுரந் தூட்டும்”

விசாரசருமர் வயதில் சிறியவராகவும் அறிவிற் பெரியவராகவும் விளங்கினார். ஒருநாள் ஆயன் புனிற்றாவிற்குப் புன்கண் புரியக் கண்டார். பசுவின் பெருமையை ஆயனுக்கு எடுத்து விரித்துரைத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோமாதாவில் சிவபிரான் முதலாக அனைதக்குக் கடவுளாரும் அமர்வர். தீர்த்தங்கள் திகழும் சராசரங்கள் சாரும். முனிவர்கள் முன்நிற்பர். கடவுள்கள் உறைவர் அண்டத்துள்ள அனைத்தும் அமைவன.

"தங்கு மகில யோனிகட்கு மேலாம் பெருமைத் தகைமையன
பொங்கு புனித தீர்த்தங்கள் எல்லா மென்றும் பொருந்துவன
துங்க வமரர் திருமுனிவர் கணங்கள் சூழ்ந்து பிரியாத
அங்க மனைத்துந் தாமுடைய வல்ல வோரால் லானினங்கள்"

(பெரிய புராணம்)

ஆயனை அகற்றி விசாரசருமர் ஆநிரை மேய்க்க முன்வந்தார். விசாரசருமருடைய ஆநிரை மேய்ப்பின் நேர்மையால் தாதையைத் தானற வீசிய தண்டனைப் பாதகத்திற்குப் பூதலத்தோர் வணங்கப் பொற் கோயிலும் போனகமும் சோதிமணி முடித்தாமமும் நாமமும் பெற்றார். மானுடம் நீங்கித் தேவருமானார். தேவரும் தொழும் சணடீசப்பதம் பெற்றார்.

ஆனாயனர் ஆயர்குலம் விளக்க அவதரித்தார் ஆநிரையை அல்லற்படாமல் அன்பு செய்து ஆதரித்தார்.

ஆனாயனார் பசுநிரை பாதுகாத்த பண்பிற்குப் பரிசு போல் சிவபிரான் கண்ணெதிரில் காட்சி தந்தார். என்றும் ஆனாயனாருடைய திருக்குழல் புல்லாங்குழல் வாசனை கேட்கப் பொற்பொதுவிற்கு உடனாக அழைத்துச் செல்லும் உயர் பேறு பெற்றார். திருநந்தி தேவர் திருவருள் பெற்ற நான்மறை யோகிகளுள் திருமூலா் ஒருவர்.

அவர் செல்லும் வழியில் நிரை மேய்ப்பான் மூலன் என்பான் வாழ்நாள் அல்க உயிரிழந்தான். அவனுடைய இறந்த உடலத்தைக் கோக்குலங்கள் வந்து சுற்றின, கதறின, சுழன்றன, மோந்தன, ஆக்களின் அருந்துயர் அறிந்தார் யோகியார். தம்முயிரைப் பிராண வாயு வழியாக மூலன் உடலில் பாய்த்தினார். மூலன் திருமூலராக உயிர்த்து எழுந்தான். அத கண்ட ஆநிரை நாத்தழும்பின.. நக்கின, மோந்தன, அருகில் அணைந்தன, கனைத்தன, நயந்தன, வாய்த்தெழுந்த களிப்பினால் வாலெடுத்துத் துள்ளின. துயர் நீங்கன களிசிரந்து மேய்ந்தன.

திருமூலர் ஆக்குலத்தின் அருந்துயர் போக்கிய பொருளினால் புவியின் மூவாயிரம் ஆண்டு அமர்ந்தார். நற்றிரு மந்திர மாலையை நாநிலத்திற்கு நல்கினார்.

பண்டைக் காலத் தமிழ் மன்னர் பசுவின்மேல் வைத்த பற்றினால் பின்வருமாறு புறநானூறு மூலம் அறத்தானு றுவன்றனர்.

"ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்
தென்புலம் வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்
பொன்போற் புதல்வரைப் பெறாஅதீரும்
எம்அம்பு கடிவிடுதும் நும்அரண் சேர்மின் என
அறத்து ஆறு றுவலும் பூட்கை மறம"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய்க்கும் தந்தைக்கும் இழைத்த தீராப் பழி பாதகம் தீர பசுவிற்கு நூற்றெட்டு நாள் அறுகு உணவு அருந்தப் பாதகனுக்கப் பரம்பொருள் பணித்தார். அது இயற்றி அவன் பாதகம் மாய்ந்தது.!

தருமக் கடவுளை இறைவன் தஞ்சம் கொடுத்து இடபமாகஏன்று கொண்டார். அதனால் சிவபிரான் முப்பு "யாவர்க்கு மாம்பத வுக்கொரு வாயுறை" என்பது திருமந்திரங்களை முனிந்த ஞான்று திருமால் இடமாக இறைவனைத் தாங்கிக் கொண்டார். என்பது திருவாசகம். "தட மதில்கள் அவை மூன்றும் தழலெரிந்த அந்நாளில் இடபமாய்த் தாங்கினான் திருமால்காண் கழலே-"

சைவசமயப் பெருவாழ்வில் பசு சமூகம் தராத மங்கல காரியம் எது?

திருக்கோவில் பெருஞ்சாந்திப் பெருவிழாவில் கோதரிசனம், திருக்கோவில் பூசை நிறைவில் கோபூசை கோயில் தரிசனத்தில் முதல் தரிசனம் நந்திதேவருக்கு.

திருமண மணவறையில் கோ தரிசனம், புதுமனை புகுவிழாவில் கோ தரிசனம். இவ்வாறு பசுவின் பெருமையும் பேணும் திறனும் பேச்சில் அடங்கா.

பண்டைத் தமிழர் பண்பாட்டில் நின்று பசுப்பேணுதல் சைவ பாரம்பரியம்.அந்நெறி ஒழுகுதல் நம் கடன்.

வழிபாட்டிற்குரிய பசுவைப் பரகதி பெறப் பயன்படுத்தல் தலையாய தருமம்.

பயன் மறந்து பாழ்நரகக் குழியில் அழுந்துவதற்கு பற்று வைத்தல் தவைகீழான அதருமம்.

சுந்தரமூர்த்தி நாயனாருடைய மந்திர வாக்குச் சிந்தனைக்குரியது.

"பாவம் ஒன்று அறியாத பாவிகள் பசுக்களைக் கொன்று தின்பர்.

"பசுக்க ளேகொன்று தின்று
பாவிகள் பாவம் ஒன்றறியா" (ஏழாந்திருமுறை)

யோகிகள், நால்வேதம் நன்குணர்ந்த அந்தணர்கள், பயன் கருதாது தவஞ் செய்வோர், பெண்டிர், பசுக்குலம் உண்ணப் பசும்புல் கொடுப்போராயின் தவத்தில் மேம்பட்டவராவர். ஆவினை உவந்து போற்றி வலஞ் செய்வாராயின் எல்லாக் கடவுளரையும் வலஞ் செய்த பயனுண்டாகும்

-காசி காண்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தைகளுக்கு பாலூட்டும் தாயின் தசைகளை வெட்டித்தின்பார்களா?
உங்களுக்கு பால் தரும் என் தசையை நீங்கள் தின்னலாமா?

எங்களை வெட்டித் தின்றால் ஒரு நாள் மட்டும் ஒரு சிலருக்கு
உணவு கிடைக்கும்
நாங்கள் உயிர்வாழ்ந்தால் வாழும் நாள் முழுவதும் பால் உணவு தருவோம்
எங்களைக் கொல்லாதீர்கள்

எம் பசுப்பால் குடித்து வளராதவர்கள் யாரும் உண்டோ மனிதர்களே
உங்களுக்காகவே எங்களையும் வாழ விடுங்கள்.
மீண்டும் சொல்கிறோம் உங்களுக்காகவே எங்களையும் வாழ விடுங்கள்.

-பசுக்கள் இடபங்களைப் பாதுகாப்பதற்கான சமய நிறுவனங்களின் இணையம்

நன்றி:- **R.S.** தொலைத் தொடர்பகம்,
சண்டிலிப்பாய்.

# துர்க்காதேவியின் துணையினைப் பெறுவோம்

தரணியினைக் காக்க வந்த
தாரணியே துர்க்கையம்மா
தயவுடனே வேண்டுகின்றோம்
தந்திடுவாய் நின் அருளை
கொடியேறிக் கொலுவிருக்கும்
கோமகளே பூமகளே
விடிவிற்காய் வேண்டிநிற்கும்
அடியாரைப் பாருரம்மா
கல்வி, செல்வம், வீரமென
கருணையினைப் பொழிந்தருளும்
தெல்லிநகர் வீற்றிருக்கும் தெய்வமவள்
துர்க்கையம்மா.

ஆக்கம்: ம. கஸ்தூரி
ஆண்டு-4
யா/ஏழாலை மேற்கு சைவசன்மார்க் வித்தியாசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தொடர்: 7

# சிறுவர் கந்த புராண அமுதம்

-மாதாஜி

## 21. பிரமன் சிறையில் வாடுதல்

அவர்கள் வருகின்ற வழியில் முருகப்பெருமான் இலட்ச வீரர்களுடன் விளையாடிக் கொண்டு நின்றார். பிரமனைத் தவிர்ந்த மற்றைய கணங்கள் தேவர்கள் முனிவர்கள் எல்லோரும் முருகப் பெருமானை வீழ்ந்து வணங்கினார்கள். ஆனால் பிரமன் மட்டும் முருகனைப் பாலன் என்று வணங்காது திரும்பினான்.

முருகப்பெருமானுக்கு கோபம் வந்து விட்டது பிரமனின் அகந்தையை அடக்கி நல்ல பாடம் கற்பிக்க விரும்பினான்.

சிவன் வேறு முருகன் வேறு அல்லர். இருவரும் ஒன்றே. முருகனை விடுத்துச் சிவனை மட்டும் வணங்குவோருக்கு இப்பாடம் பொருந்த பிரமனுக்குப் பாடம் கற்பிக்க வேண்டும் என எண்ணிய முருகப்பெருமான், ஆணவத்துடன் பிரமனை அழைத்தான்.பிரமன் முருகன் அருகில் அகங்காரத்துடன் வந்து நின்றான். முருகன் சிறுவன் என்ற நினைப்பால் முருகன் அருகில் பிரமன் கைகுவித்து வணங்காது இறுமாப்புடன் நின்றான்.

முருகப்பெருமான் பிரமனை நோக்கி, நீ என்ன தொழில் புரிகிறாய் என்று கேட்டார். ”நான் உலகிலுள்ள உயிர்கள் அத்தனையும் படைப்பவன் என்று ஆணவத்தடிப்புடன் பதில் கூறினான். மீண்டும் பிரமனை நோக்கிய முருகப்பெருமான் உனக்கு வேதம் வருமா? என்று கேட்டார். பிரமன் நடுங்கியபடி ”ஆம்’’ என்று கூறித் தலையாட்டினான். இதைக் கண்ட முருகப்பெருமான் நகைத்தார். பிரம்மா வேதம் படித்தது ஏதோ உண்மையாக இருப்பினும் அவன் வேதத்தின் உட்பொருளை நன்கு உணராதிருந்ததை முருகப்பெருமான் நன்கு ஊகித்துக் கொண்டார்.

பின்பு முருகவேள் நன்று நன்று. வேதங்களில் இருக்கு வேதத்தைச் சொல்லென்று பிரமனைப் பணித்தார். வேதம் ஓதுவதுமுன் ”ஓம்” என்னும் பிரணவமாகிய மந்திரத்தைப் பிரமன் ஓதினான். 'ஓம்' என்று பிரமன் கூறியதும் முருகன் அந்தளவில் நிறுத்தென்று பிரமனிடம் கூறினார். பிரமன் 'ஓம்' என்றளவில் நிறுத்திக் கொண்டான்.

”ஓம்’’என்ற பிரணவ மந்திரத்தின் பொருள் யாது? என்று முருகப் பெருமான் பிரமதேவனைக் கேட்டார். பிரமதேவன் பொருள் தெரியாது விழித்தான். வேதங்களைச் சிவபெருமானிடம் பாடம் கேட்டபோது, அப்போதே அவற்றின் பொருளைக் கேட்காத தவறைப் பிரமன் நினைந்து வருந்தினான். கண்கள் சுழன்றன நாணமுற்று நின்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரம தேவனின் மயக்கத்தைக் கண்ட முருகப்பெருமான் பிரணவப்பொருளின் பொருள் தெரியாது எவ்வாறு நீ படைத்தற் தொழிலைச் செய்ய முடியும் என்று தனது பன்னிரு கைகளாலும், பிரமனின் நான்கு தலைகளிலும் பளார் பளார் எனக்குட்டினார் பின்னர் தனது தம்பியாகிய வீரவாகு தேவரை அழைத்து பிரமனைக் கந்த கோட்டக் கிரியில் சிறையில் வைக்கும்படி கூறினார்.

மாணவர்கள் படிக்கும்போதும் ஆசிரியரிடம் பாடம் கேட்கும்போதும் பொருள் உணர்ந்து கேட்டல் வேண்டும். மாணவராயினும் பண்டிதராயினும் பொருளுணர்ந்து படித்தல் வேண்டும். படித்து விட்டோம் என்ற செருக்கினால் பெரியவர்களையும் சிறியவர்களையும் அவமதித்தால், முருகனால் பிரமதேவனுக்கு ஏற்பட்ட அவமானம் ஏற்படும் என்பதை இந்தச் செய்தி கற்பிக்கின்றது.

பிரமன் சிறையில் அடைபட்ட பின்னர் முருகப்பெருமானே படைத்தல் தொழிலைப்புரிந்து வந்தார்.

## 22. சுவாமி நாதன்

பலகாலமாகப் பிரமதேவர் சிறையில் இருந்தார். முருகப்பெருமானும் படைத்தற் தொழிலைச் செய்து கொண்டிருந்தார்.

இதனையறிந்த தேவர்கள் முதலானோர் எவ்வாறாயினும் பிரமதேவரைச் சிறையில் இருந்து மீட்க நினைத்தார்கள். இதனால், ஆதித்தர்கள், மருத்துவர்கள் வசுக்கள் சப்த ரிஷிகள், விஞ்சையர்கள், கருடர்கள் திக்குப்பாலர்கள் இவ்வாறாகச் சகலரும் எம்பெருமான் எழுந்தருளியிருக்கும் திருக்கையிலாய மலை சென்றார்கள். சிவபெருமானை வேதங்களாற் பாடித்துதி செய்தார்கள். சிவபெருமான் அவர்கள் அங்கு வந்த காரணத்தை வினாவிய போது, முருகப்பெருமானால் பிரமதேவருக்கு ஏற்பட்ட சிறைத்தண்டனை வரலாற்றைக்கூறி எப்படியாவது மன்னித்துப் பிரமனைச் சிறையில் இருந்து விடுவிக்க வேண்டுமெனப் பிரார்த்தித்தார்கள்.

பின்னர் திருமால் சிவபெருமானை வணங்கி எம்பெருமானே எங்கள் துன்பங்களைத் துடைத்து இன்பம் தரவே முழுமுதற் பொருளாகிய தாங்கள் முருகப்பெருமானை அருளினீர்கள். பிரம தேவரின் அறியாமையால் முருகன் பிரமனைச் சிறையில் தள்ளிவிட்டுத் தானே பிரமனின் தொழிலைப் புரிகின்றார். முருகன் தங்கள் மைந்தன். அதுபோலப் பிரமனும் தங்கள் புதல்வர் போன்றவர் இதனால் பிரமனை மன்னித்துச் சிறையில் இருந்து விடுவிக்க வேண்டும் என்று பிரார்த்தனை செய்தார்.

சிவபெருமான் புன்முறுவல் செய்தார். பின்னர் தேவர்களே! சிவன்வேறு, முருகன் வேறு அல்ல. நாம் இருவரும் ஒரே தன்மை உடையவர்கள். என்னையும் குமாரக் கடவுளையும் பிரித்து வேறு வேறாகப் பேசுபவர்கள் சுத்தமடையர்கள். என்னை வேறாக முருகனை வேறாக வைத்து எண்ணுபவர்கள் ஒருபோதும் இன்பம் அடையமாட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரமன் நல்லுணர்வு பெற்றுய்யவே முருகனிடம் சிறைத் தண்டனை பெற்றான். பிரணவ மந்திரம் ஒரு முறையே தனது ஓங்கார பிரணவ ஒலியால் அழைப்பதைக் காண்கிறாய் அல்லவா! ஆனால் ஓம் சுப்ரஹ்மண்யம் ஓம் சுப்ரஹ்மண்யம், ஓம் சுப்ரஹ்மண்யம் என மூன்று முறை ஓம், ஓம், ஓம், என்னும் பிரணவ மந்திரம் ஒலிப்பதைக் காண்பதால் முருகன் பெருமை நன்கு உணரப்படுவதை செருக்குற்ற பிரமன் அறியாது சிறைப்பட்டான் எவ்வாறு அவனை விடுவிப்பது என்று கூறினான்.

பின்னர் கருணைக் கடவுளாகிய சிவபெருமான் தேவர்கள்பால் மனமிரங்கி நந்திதேவரை நோக்கி, "நீ முருகனிடம் சென்று நான்முகனைச் சிறையிலிருந்து விடும்படி நான் கூறியதாகக் கூறுவாய்" என்று நந்தியை முருகப் பெருமானிடம் அனுப்பினார். நந்தியம்பெருமான் முருகப்பெருமானிடம் சென்றான். முருகப்பெருமானை கைகூப்பி வணங்கிச் சிவபெருமான் கூறியவாறு கூறினார். முருகப்பெருமான் புன் முறுவல் செய்தார். பின்னர் நந்தியந்தேவரை நோக்கிப் பிரம தேவனை சிறையில் நின்றும் விடமுடியாது, உன்னையும் சிறையில் அடைத்துவிடுவேன் ஓடிப்போ என்று முருகன் சினந்து கூறினார். நந்தி நடுநடுங்கி முருகப்பெருமானை வணங்கினார்.

திருக்கையிலைக்கு நந்தியந்தேவர் திரும்பி வந்தார். கருணைக் கடவுளாகிய சிவபெருமானிடம் முருகப்பெருமான் கூறியவற்றைக் கூறினார்.

நந்தியம்பெருமான் கூறியதைக் கேட்ட மணிகண்ட சிவன் திருநகை புரிந்து கயிலைமலையை விட்டிறங்கினார். இடப வாகனத்தில் ஏறினார். திருமால் முதலான ஏனைய தேவர்கள் சூழக் கந்தகோட்டம் வந்தார். இதனை முருகன் கண்டதும் தனது சிங்காசனம் விட்டிறங்கி தந்தையை பேரன்புடன் வரவேற்றுத் தனது சிம்மாசனத்தில் அமரவைத்து தந்தை வந்த காரணத்தை வினாவினார். "குழந்தாய் நீ பிரமனைச் சிறையில் வைத்திருக்கிறாய், அதனால் பிரமனை விடுவிக்கவே வந்தேன்.." என்று சிவபெருமான் கூறினார்.

முருகப்பெருமான் புன்முறுவலித்தார். தந்தையே பிரமனுக்கு வேதங்களின் பொருள் தெரியாது. பிரணவப்பொருளின் பொருள் தெரியாத பிரமன் எவ்வாறு படைத்தற் தொழில் புரியமுடியும். அதனால் பிரமனை சிறையில் இருந்து விடுவிக்க முடியாதெனக் கூறினார்.

சிவபெருமான் சிறிது சினந்தார். பின்னர் மகனே எமது கட்டளைப்படி பிரமனைச் சிறையில் இருந்தும் விடுவிக்கும்படி நந்தியந்தேவரை அனுப்பினோம். அதனையும் நீ கேட்கவில்லையே. நாமே நேரில் வந்து பிரமனைச் சிறையில் இருந்தும் விடுதலை செய்யும்படி கேட்டோம் அதையும் நீ மறுக்கலாமோ என்று கேட்டார்.அதற்கு முருகப்பெருமான் உங்கள் திருவுளம் இதுவானால் அப்படியே செய்கிறேன் என்று பதில் கூறிய பின் அருகில் இருந்த பூதகணங்களை அழைத்து பிரம தேவனைச் சிறையில் இருந்து அழைத்து வரும்படி பணித்தார். அவ்வாறே பூதகணங்கள் பிரமதேவனைச் சிறையில் இருந்து அழைத்து வந்து, சிவன் முருகன் முன்னே நிறுத்தினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரமன் சிவபெருமானையும் முருகப்பெருமானையும் வணங்கினான். அதிக நாளாகச் சிறையில் இளைத்து விட்டாயே பிரமா, என்று பரிவுடன் சிவபெருமான் கேட்டார்.

எம்பெருமானே, நான் அகங்காரத்தால் விட்ட பிழையால் கிடைத்த சிறைத் தண்டனையால் சிறைச்சாலை வாசம், இமைப்பொழுதும் தங்களை மறவாது தவம் செய்யும் தவச்சாலையாகவே இருந்தது. முருகப்பெருமானது திருவடி தீண்டியது, திருவடி தீட்சையாகவே இருந்தது. திருக்கரங்கள் தீண்டியது ஸ்பரிச தீட்சை போலவே இருந்தது. அதனால் இப்போது புனிதனானேன். எனப் பிரமன் கூறினான். எம்பெருமான் பிரமனை மீண்டும் படைத்தற் தொழிலை இயற்றும்படி அனுப்பினார்.

பின்னர் சிவபெருமான் முருகப்பெருமானை நோக்கிக் "குழந்தாய் இங்கே வா" என்று அழைத்தார் முருகப்பெருமான் தந்தையின் அருகில் வந்தார். எம்பெருமான் முருகப்பெருமானை வாரியணைத்துத் தன் மடியில் இருத்தி உச்சி மோந்தார். பிரமனுக்கு பிரணவப்பொருள் தெரியாது. உனக்குப் பிரணவப்பொருளின் பொருள் தெரியுமா என்று கேட்டார். "ஆம் தெரியுமே, அன்று ஒருநாள் பிரணவப்பொருளின் பொருளை உமாதேவியாருக்கு இரகசியமாகக் கூறியபோது நான் மறைந்து இருந்து கேட்டேன். அதனை உங்கட்கும் கூறவேண்டுமானால், நீங்கள் சிஷ்யனாக இருக்க வேண்டும். நான் குருவாக இருந்து உரிய முறைப்படி ஓத வேண்டும்" எனக் கூறினார்.

அவ்வாறாகட்டும் எனச் சிவபெருமான் வேதாகமப்படி சிஷ்யன் பீடத்தில் இருக்கக் கருணைவள்ளலாகிய முருகப்பெருமானும் வேதாகம முறைப்படி குருபீடத்தில் இருந்து தந்தைக்குப் பிரணவப்பொருளை உபதேசஞ் செய்து சுவாமி நாதன், குமரகுருபரன் என்ற திருநாமங்களைப் பெற்றார்.

**(தொடரும்...........)**

ஆழ்கடலில் முத்துக்கள் கிடக்கின்றன. ஆனால் அவற்றை அடையப் பல ஆபத்துக்களைச் சந்திக்க வேண்டும். ஒரு தரம் மூழ்கி எழும்போது அவற்றை அடையத் தவறினால் கடலில் முத்துக்களே இல்லை என்ற முடிவுக்கு வந்துவிடக்கூடாது. இறுதியில் உனக்கு வெகுமதி கிட்டுவது உனது முயற்சியிலேயே தங்கியிருக்கிறது. இதுபோலவே இறைவனை நாடுவதிலும் அவரைக் காண நீ செய்யும் முதல் முயற்சிகள் பயனளிக்காவிடில் மனந்தளரக்கூடாது. தொடர்ந்து முனைந்து முயன்றால் இறுதியில் இறைவனை அடைவது உறுதி.

**- பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து சமயத்தின் தனித்துவ மேன்மை இகழப்படும் அவலம் தடுக்கப்படுமா?

29-08-2003 உதயன் நாளிதழில் இந்து சமயத்தின் தனித்துவ மேன்மை இகழப்படும் அவலம் தடுக்கப்படுமா? என்னும் தலைப்பில் வடகோவை சிவநேசராசன் எழுதிய கட்டுரை அருள்ஒளி வாசகர்கள் வாசித்து பயனடைய மீள் பதிப்பாக வெளியிடப்படுகிறது.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்" என்று அருட்பாடலில் குறிப்பிடப்படுவது போன்று இன்று உலகமெங்கும் வியாபித்து விளங்கிக் கொண்டு இருக்கின்றது எமது சைவ சமயம்.

இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் மட்டுமன்றி நேபாளம், மொறீசியஸ் போன்ற பல நாடுகளிலும் எழுச்சியுற்றுக் காணப்படுகின்றது. இந்துமதம்.

இயற்கை எழில் கொஞ்சும் மருதநிலம், குறிஞ்சிநிலம், போன்ற இடங்களில் அமைதியான சூழலில் சைவாலயங்கள் இருப்பது போன்று உலகில் சனநெரிசல் மிகுந்த நகரங்களான லண்டன், ரொறொன்ரோ போன்ற இடங்களிலும் பல சைவாலயங்கள் தலைநிமிர்ந்து நின்று சைவம் வளர்க்கப்படுகின்றது.

மனிதன் எப்படியும் வாழலாம் என்றில்லாமல் இப்படித்தான் வாழ வேண்டும் என்ற வரையறைக்குள் நின்று வழிகாட்டுவது சைவசமயம்.

இயற்கை வடிவிலே இறைவனைக் காண்கின்ற சமயம் சைவசமயம். அன்று சிக்காகோ மாநாட்டில் இந்து சமயத்தின் மேன்மையை உலகத்துக்கு அறிவித்தார் சுவாமி விவேகானந்தர்.

இறைவனின் அனுக்கிரகம் பெற்ற சைவகுரவர்களாகிய நாயன்மார்களினால் பாடப்பெற்ற தேவார, திருவாசகங்கள் சைவசமயத்தவர்களின் வாழ்வுக்கு வழி காட்டுவன.

இந்து மதத்தில் கூறப்படுகின்ற புனிதமான ஆத்மீக நெறியானது மேலைத்தேசத்து மக்கள் பலரையும் ஆட்கொண்டிருக்கின்றது என்பது உலகறிந்த விடயம். உதாரணமாக அமெரிக்க நாட்டைச் சேர்ந்த சுவாமி தந்திரதேவ மகராஜ் இந்து மதத்தின் ஆத்மீக நெறியில் நாட்டம்கொண்டு காவியுடை தரித்து திருகோணமலையில் ஆசிரமம் அமைத்து தேவார, திருவாசகங்களின் பொழிப்புரைகளை அழகு தமிழில் சிறுபிள்ளைகளுக்கு விளக்கிக் கூறுகின்ற புனிதமான பணியைச் செய்துகொண்டிருக்கின்றார்.

சைவசமயத்தின் தத்துவங்களைக் கூறுகின்ற நூல்களில் ஒன்றாகிய "சைவ சித்தாந்தம்" பிற மதத்தைச் சேர்ந்த கல்விமான்களினாலும் பல்கலைக்கழகங்களில் ஆய்விற்குட்படுத்தப்பட்ட பெருமையைப் பெறுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகவே, தற்காலத்தில் சைவசமயத்தின் மேன்மையானது அகிலமெங்கும் பிரகாசித்துக்கொண்டிருக்கின்றது என்பதில் சிறிதேனும் ஐயமில்லை.

## யாழ்ப்பாணமும் சைவசமயமும்

தமிழ் மொழியையும் சைவசமயத்தையும் அவற்றுக்கேயுரித்தான கலாசார பண்பாடு, இயல்புகள் குன்றாத வகையில் வளர்த்த பெருமைக்குரிய மண் யாழ்ப்பாண மண்.

அந்நியராட்சிக் காலத்தில் சைவாலயங்கள் இடிக்கப்பட்டு சைவசமயம் அடிமைத்தளையினுள் சிக்கிக் கொண்டிருந்த காலத்தில் நல்லை நகர் ஆறுமுகநாவலர் அவர்கள் சைவசமயத்தையும் தமிழ் மொழியையும் வீழ்ச்சியில் இருந்து காப்பாற்றி மீண்டும் மேன்மையுறச் செய்தார்.

அத்துடன் கடந்த கால யுத்த அனர்த்தங்களின்போது யாழ். குடா நாட்டுக் கிராமங்களில் வாழும் ஏழை மக்களின் வறுமை நிலையைச் சாதகமாகப் பயன்படுத்தி அரைக்கிலோ அரிசிக்கும் கால்கிலோ பருப்புக்கும் எமது சைவசமயம் பேரம் பேசப்பட்ட நிலையும் யாழ் மண்ணில் நடைபெற்றிருக்கின்றது.

"பட்டினி கிடந்து பசியால் மெலிந்து பாழ்பட நேர்ந்தாலும் இறக்கும்போது சைவசமயத்தவாகளாவே இறப்போம்" என்ற உறுதியுடன் செயற்பட்ட குடாநாட்டுக் கிராமங்களில் வாழும் ஏழைச் சைவமக்களை யாழ் மண்ணில் சைவசமய வரலாறு என்றும் மறந்துவிட முடியாது.

ஆகவே, யாழ் மண்ணுடன் இரண்டறக் கலந்துவிட்ட சைவசமயத்தை ஒருபோதும் பிரிக்கமுடியாது என்பதை வரலாறு நன்கு உணர்த்தியுள்ளது. ஆனால் இவ்வாறு பலமுனைப் போராட்டங்களின் ஊடாக எழுச்சியுற்ற சைவசமயத்தின் மேன்மையானது தற்காலத்தில் யாழ் குடாநாட்டில் பேணிக்காக்கப்படுகின்றதா என்பது கேள்விக்குரிய விடயமே என்பதை நாம் விரும்பியோ விரும்பாமலோ ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

## சைவாலயங்கள்

"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பது தமிழ்ப்பொன்மொழி "அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது" என்று ஔவையார் பாடியது போன்று "அரிது அரிது அமைதியான சைவாலயங்களைக் காண்பது அரிது" என்ற நிலையே தற்காலத்தில் கூடுதலாகக் காணப்படுகின்றது.

"நான் பெரிது நீ சிறிது" என்ற விதண்டா வாதங்கள் வளர்ச்சி அடைந்து கடவுள் யாருக்குச் சொந்தம் என்ற நிலையில் நீதிமன்றப் படியேறி வழக்காடுகின்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவாலயங்களே கூடுதலாகக் காணப்படுகின்றன. அமைதியைப் பேணவேண்டிய ஆலயங்கள் சில சந்தர்ப்பங்களில் சமர்க்களங்களாக மாறுகின்றன.

ஊரின் நடுவே அமைந்திருந்த கோயில்கள் காரணமாக சமூக ஒற்றுமை பேணப்பட்ட அந்தக்காலம் ஆலயப்பிரச்சனைகள் காரணமாக இரத்த உறவுகள் பிளவுபட்டிருப்பது இந்தக் காலம். "குளிக்கப்போய்ச் சேறு பூசும் நிலையில்" மாற்றம் வருமா?

சமூக ஒற்றுமையைக் குலைக்கின்ற சைவாலயப் பிரச்சினைகள் அடுத்த சந்ததிக்கும் கையளிக்கப்படுமா?

## சைவ ஆலயங்களில் மிருகபலிகள்

கொலை, களவு போன்ற பஞ்சமா பாதகங்களைச் செய்யக்கூடாது என்பதைத் திடமாக வலியுத்துகின்ற சமயம் எமது சைவசமயம்.

ஆனால், அண்மையில் வலிகாமம் பகுதியிலுள்ள சைவாலயம் ஒன்றில் எண்ணூறு ஆட்டுக்கடாக்கள் பலியிடப்பட்டதாக பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்துமத வளர்ச்சியில் அக்கறையுள்ள பலபொது அமைப்புக்கள் குடா நாட்டில் இயங்கிக் கொண்டிருந்த போதிலும் சில ஆலயங்களில் நிகழும் மிருகபலிகள் தொடர்பாக மறுப்பு அறிக்கை எதுவும் தெரிவிக்காது மௌனம் சாதித்தமை மிகவும் கவலைக்குரிய விடயமே. மௌனம் சம்மதத்தினன் அறிகுறியாகவும் இருக்கலாம்.

புதையல் பெறுவதற்காக குழந்தைகளை நரபலி கொடுத்தல், கணவன் இறந்தபின் மனைவியை உடன் கட்டை ஏற்றுதல், தேர்தலில் அரசியல் வாதிகள் தோற்றால் ஆதரவாளர்கள் தமக்குத் தாமே தீ மூட்டித் தற்கொலை செய்தல், சினிமா நடிகைகளுக்கு கோயில்கட்டிப் பூசை செய்தல் போன்ற பகுத்தறிவற்ற செயற்பாடுகளுள் சைவாலயங்களில் மிருகபலிச் செயற்பாடுகளும் அடக்கப்படுகின்றன. என்பதை சைவசமயத்தவர்கள் என்று போலி வேடம் தரித்த சில பழமைவாதிகள் அறியாமல் இருப்பது மன வேதனைக்குரிய விடயமே.

## சைவாலயங்களின் சமூகத் தொண்டு

விரல்விட்டு எண்ணக்கூடிய ஓரிரண்டு சைவாலயங்கள் மட்டும் சமயத் தொண்டுடன் சமூகத் தொண்டையும் இணைத்து முன்மாதிரியாகச் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றன. ஏனைய பெரும்பான்மையான சைவாலயங்களில் சமயத் தொண்டுக்கும் இடையே நீண்டதொரு வெற்றிடம் காணப்படுகின்றமையை நாம் அவதானிக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த கால யுத்த அனர்த்தங்களின்போது கொடிய வறுமையால் வாடிய கிராமப் புறத்து ஏழைச் சைவமக்களிடம் சைவசமயத்தின் மேன்மையானது அரைக்கிலோஅரிசிக் குப் பேரம் பேசப்பட்டதற்குப் பிரதான காரணம் சைவாலயங்களின் சமூகத்தொண்டு பின்னடைந்துள்ளதே என்பது யாரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாத உண்மை ஆகும்.

## திருவிழாக்கள்

''பரம்பொருளின் பெரும்புகழைப் பாடிபணிதலன்றிப் பிறவார்த்தை யாதொன்றும்பேசற்க ஆலயத்துள்''

என்ற வாசகம் பெரும்பான்மையான சைவாலயச் சுவர்களில் காணப்படுகிறது. ஆனால், உண்மையில் நடப்பது என்ன? திருவிழாக் காலங்களில் ஆலயச் சூழலானது புனிதத் தன்மையிழந்து களியாட்ட கேளிக்கைக்குரிய இடமாக மாற்றப்படுகின்றது. குளிக்கப்போய்ச் சேறு பூசும் நிலை கூடுதலாகக் காணப்படுகின்றது.

மேலைத்தேச மக்களாலும் போற்றப்படுகின்ற சைவ சமயத்தின் மேன்மையானது இகழப்படும் அவல நிலையே ஏற்படுகின்றது.

சைவசமயத்தவர்களுக்கே உரித்தான கலாசாரப் பண்பாடுகள் நடை, உடை, பாவனை மூலம் ஏளனம் செய்யப்படுகின்றன.

சைவசமயத்தின் மேன்மையை பேணிக் காக்கவேண்டிய இன்றைய இளம் சமுதாயமே சில சந்தர்ப்பங்களில் பாரம்பரியத்துக்கு ஒவ்வாத உடையணிந்தும் ஆலயச்சூழலல்ல நண்பர்கள் கூடிக்கும்மாளம் அடிக்கும் கேளிக்கைக்குரிய இடமாக மாற்றுவதும் மிகவும் கவலைக்குரிய விடயமே. ஆகவே, இனியாவது சைவசமயத்தின் மேன்மை பேணிக்காக்கப்படுமா?

ஆன்மாவிற்குள் ஆசைவெள்ளம் பொதிகள் வாயிலாக வந்து புகுந்துகொண்டே இருக்கும். ஆனால் ஆன்மா அமைதியாக இருக்கும். தேர்வு செய்யும். ஏற்பன ஏற்கும். அதுவே ஆன்மீக வாழக்கையின் இயல்பு.

யமனுக்கும் காமனுக்கும் ஆராய்ந்து பார்த்தால் மிகுந்த வேறுபாடு இருப்பது தெரியும். யமன் பிரியமற்றவனைப்போல் இருந்து உயிர்களுக்கு நன்மை செய்கிறான். காமன் பிரியமுள்ளவனைப் போல் இருந்து தீமையைச் செய்கின்றான்.

இருமையின் அடிமையாக நான் இல்லாத போதும் தேவீ நான் உன்னுடையவன் என்பதே உண்மை. நீ என்னுடையவள் என்பதல்ல. அலைகள் ஆழிக்குச் சொந்தமாய் இருக்கலாம். ஆனால் ஆழி ஒருபோதும் அலைகளுக்குச் சொந்தமில்லை.

**- ஆதிசங்கரர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# மஹாளய பட்சம்

பண்டிதர், சைவப்புலவர் திரு. வ. சுப்பிரமணியம்
தும்பை நகர், பருத்தித்துறை.

இச்சொற்றொடர் (மகா-பெரிய, ஏயம் - ஒடுக்கம், தங்கல்) பிதிர்கள் சென்று ஒடுங்கியிருக்கிற பக்ஷத்திற்குரிய (அமாவாசை ஈறான) 15 நாட்கள் கொண்ட காலமாகும். இப்பட்சத் தொடக்கிதிலிருந்து ஒரு மாதகாலத்திற்கு அதாவது சூரியன் விருச்சிகராசியிற் பிரவேசிக்கும் வரையில் ஒருவனுடைய முன்னோர்கள் (பிதிர்கள்) அவன் வீட்டில் சூக்கும உடம்புடன் தங்கி நிற்பார்கள். இந்து (சைவ) சமயக் கிரியைகள் அனைத்தும் தீட்சா குருவினாலும் அவருபதேசப்படி கர்த்தாவாலும் செய்யப்படுவனவாதலால், மஹாளய சிரார்த்தத்தில் செய்யப்படும் கிரியைகள் மூலமாகக் கொடுக்கப்படும் பலி, வணக்கம் முதலியவற்றை அந்தப் பிதிர்கள் மகிழ்ந்து ஏற்றுக்கொள்வார்கள் என்பது சைவசமயக் கொள்கை. இதனாற்றான் ஒவ்வொரு அமாவாசைத் தினத்திலும் தங்கள் சந்ததியாற் கொடுக்கும் பலி முதலியவற்றால் அவனது பிதிர்கள் திருப்தியடைவார்கள் என்னும் நம்பிக்கையுண்டு. ஆயினும் மற்றைய மாதங்களில் வருகிற அமாவாசைத் தினத்திலும் பார்க்க புரட்டாதி மாத அமாவாசை அதிக புனிதமும் மேன்மையும் உடையதாயிருத்தலின் அத்தினத்திற்கு முந்திய 14 தினங்களும் பிந்திய பதினான்கு தினங்களும் பரிசுத்த தினங்களாகவே எண்ணப்படுகின்றன. ஆகவே மற்றைய மாத அமாவாசைத் தினங்களில் ஒரு கணநேரமளவில் வந்து தங்கி நின்று, தங்கள் சந்ததியரால் செய்யப்படும் தர்ப்பணம் முதலியவற்றை ஏற்று, உடனே தங்களிருப்பிடமாகிய யமகுலகஞ் செல்லும் பிதிர்கள் இம்மஹாளய பட்ச காலத்தில் முன் சொல்லியபடி ஒருமாத காலத்திற்கு விருந்தினராகத் தங்கி நிற்பார்கள். ஆதலின் இக்காலத்தில் விஷேச கிரியைகளைச் செய்து பால், சர்க்கரை, தேன், நெய், அன்னம், தயிர், கறிவகைகள், எள்ளு முதலியவற்றால் பிதிர்களைச் சந்தோஷமடையச் செய்தல் வேண்டும். ஒருவன் யாசகனாகிலும் பொருளில்லாத மிக்க வறியவனாயினும் இச்சிரார்த்தத்தை செய்தல் வேண்டும். இவன் எள்ளும் தண்ணீரும் அன்புடன் இறைத்தால் அதுவே பிதிர்களைத் திருப்திப்படுத்தும். அன்பும் சிரத்தையுங் கொண்டு இக்கிரியை செய்யின் அதுவே புனித இடமாகிய (Gaya) கயாவில் செய்த பலனை அடைவிக்கும்.

இந்தச் சிரார்த்தம் செய்பவருக்கும் அவருடைய பிதிரர்களுக்கும் நன்மையே பயக்கும். இக்கிரியையினால் பிதிர்கள் பிரேத உலகம்விட்டு மேனிலையை அடைவார்கள். செய்தவரும் இம்மையில் தன, தானிய, சம்பத்து, புத்திர லாபம் முதலிய ஐசு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரியங்களைப் பெற்றுவாழ்தலுமன்றி மறுமையில் நற்கதியையும் அடையக் கூடியதாக இருக்கும்..

இச் சிராா்த்தத்தை கிருகஸ்தன் ஒருவன்,

| | | |
|---|---|---|
| முதலாம் | நாள் செய்யின் | இலாபமும் |
| இரண்டாம் | ,, | புத்திரப்பேறும். |
| மூன்றாம் | ,, | தன் மன விருப்பங்களும், |
| நாலாம் | ,, | பகை நாசமும் |
| ஐந்தாம் | ,, | செல்வமும் |
| ஆறாம் | ,, | மதிப்பும் கீர்த்தியும் |
| ஏழாம் | ,, | அதிகாரமும், செல்வாக்கும் |
| எட்டாம் | ,, | மேலான விவேகமும் |
| ஒன்பதாம் | ,, | நன் மனைவியும் |
| பத்தாம் | ,, | தன் எண்ணங்கள் நிறைவேறுதலும் |
| பதினொராம் | ,, | வேத முதலிய சாஸ்திரப் பயிற்சியும் |
| பன்னிரண்டாம் | ,, | பிள்ளைப்பேறு, கல்வி செல்வமும் |
| பதின்மூன்றாம் | ,, | பசுக்கள், சரீரசுகம், தீர்க்காயுள் முதலிய விசேட பேறுகளும் |
| பதின் நாலாம் | ,, | ஆயுதங்கள், நீரில் அமிழ்ந்தி இறத்தல் நஞ்சுண்டு இறத்தல் முதல்யவற்றால் வருந்தும் பிதிர்கள் அவ் வேதனை ஒழிந்து சந்தோஷப்படுவார்கள். |

பதினைந்தாம் தினமாகிய அமாவாசையில் செய்யின் இவைகள் எல்லாவற்றிலுஞ் சிறந்த மோட்ச பதவியை அடைவார்கள்.

ஆகவே இக்கிரியையை அன்புடன் செய்யின் மேற்கூறிய வண்ணம் இரு திறத்தாரும் நன்மையே அடைவார்கள். செய்யாவிடின் இரு திறத்தாருக்கும் துன்பமாம். பிதிர்களுக்கு தாங்கள் மேற்கதியடைய வேண்டும் என்கின்ற நம்பிக்கையற்றுவிடும். அமாவாசையின் பின்பும் 14 நாட்களுக்கு அப்பிதிர்கள் தங்கள் சந்ததியார் வீட்டில் தங்கி நிற்பவராதலின் அந்நாட்களிலாயினும் அவர்களைத் திருப்தி செய்தல் நல்லது. அது அவனது கடமை அங்ஙனம் செய்யானாயின் அப்பிதிர்களின் சாபத்தால் பல நிர்ப்பந்தங்களையடைவான். ஆதலின் இதனை உணர்ந்து கிருக்ஸ்தராயுள்ளவர்களும் ஏனையோரும் இக்கிரியையைச் செய்து பிதிர்களை நற்கதியடைய செய்வார்களாக.

சுபம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

## தெல்லிப்பழை



# ஸ்ரீ லிங்காஷ்டகம்

இராகம்: யமுனாகல்யாணி (அ)ராகமாலிகை     தாளம்: ஆதி

ப்ரஹ்ம முராரி ஸுரார்ச்சித லிங்கம்
நிர்மல பாஷித சோபித லிங்கம்
ஜன்மஜ துக்க விநாசக லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம் 1

தேவமுனி ப்ரவரார்ச்சித லிங்கம்
காமதஹ்ம கருணா கர லிங்கம்
ராவண தர்ப்ப விநாசன லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம் 2

ஸர்வ ஸுகந்தி ஸுலேபித லிங்கம்
புத்தி விவர்த்தன காரண லிங்கம்
ஸித்த ஸுஸராஸுர வந்தித லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம் 3

கனக மஹாமணி பூசித் லிங்கம்
பணிபதி வேஷ்டித சோபித லிங்கம்
தகூஷ ஸுயக்ஞ விநாசன லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம் 4

குங்கும சந்தன லேபித லிங்கம்
பங்கஜ ஹார ஸுசோபித லிங்கம்
ஸஞ்சித பாப விநாசன லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம் 5

தேவ கணார்ச்சித ஸேவித லிங்கம்
பாவைர் பக்திபி ரேவச லிங்கம்
தினகர கோடி ப்ரபாகர லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம் 6

அஷ்ட தளேபரி வேஷ்டித லிங்கம்
ஸர்வ ஸமுத்பவ காரண லிங்கம்
அஷ்ட தரித்ர விநாசித லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம் 7

ஸுரகுரு ஸுரவர பூஜித லிங்கம்
ஸுரவன புஷ்ப ஸதார்ச்சித லிங்கம்
பராத்பரம் பராமாத்மக லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம் 8

- ஸ்ரீமத் சங்கர பகவத்பாத சுவாமிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகலகலாவல்லிமாலை

வெண்டா மரைக் கன்றி நின்பதந்
தாங்க என் வெள்ளை உள்ளத்
தண்டா மரைக்குத் தகாது கொலோ
சகம் ஏழும் அளித்து
உண்டான் உறங்க ஒழித்தான் பித்
தாகவுண்டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலாவல்லியே.

நாடும் பொருட் சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும்பணியிற் பணித்தருள் வாய்
பங்கயாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்றும் ஐம்பாற்
காடும் சுமக்கும் கரும்பே
சகல கலாவல்லியே.

அளிக்கும் செழுந்தமிழ் தெள்ளமுது
ஆர்ந்து உன் அருட்கடலில்
குளிக்கும் படிக்கென்று கூடுங் கொலோ
உளம் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக் கண்டு
களிக்கும் கலாப மயிலே
சகல கலாவல்லியே.

தூக்கும் பனுவல் துறை தோய்ந்த
கல்வியும் சொற்சுவை தோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்வட நூற்கடலும்
தேக்கும் செழுந்தமிழ்ச் செல்வமும்
தொண்டர் செந்நாவில் நின்று
காக்கும் கருணைக் கடலே
சகல கலாவல்லியே.

பஞ்சப் பிதம் தரு செய்ய பொற்
பாத பங்கேருகம் என்
நெஞ்சத் தடத்து அலராத தென்னே
நெடுந்தாட் கமலத்(து)
அஞ்சத் துவசம் உயர்த்தோன்
செந்நாவும் அகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத்து இருந்தாய்
சகல கலாவல்லியே.

பண்ணும் பரதமும் கல்வியும்
தீஞ்சொற் பனுவலும் யான்
எண்ணும் பொழுது எளிது எய்த
நல்காய் எழுதாமறையும்
விண்ணும் புவியும் புனலும் கனலும்
வெங்காலு மன்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே.

பாட்டும் பொருளும் பொருளால்
பொருந்தும் பயனும் என்பால்
கூட்டும்படி நின் கடைக்கண் நல்காய்
உளம் கொண்டு தொண்டர்
தீட்டும் கலைத் தமிழ்த் தீம்பால்
அமுதம் தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள் ஓதிமப் பேடே
சகல கலாவல்லியே.

சொல்விற் பனமும் அவதானமும்
கல்வி சொல்லவல்ல
நல்வித்தையும் தந்து அடிமை கொள்வாய்
நளினா சனஞ்சேர்
செல்விக்கு அரிது என்று ஒருகாலமும்
சிதையாமை நல்கும்
கல்விப் பெருஞ் செல்வப் பேறே
சகல கலாவல்லியே.

சொற்கும் பொருட்கும் உயிராம்
மெய்ஞ் ஞானத்தின் தோற்றம் என்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்
நிலந்தோய் புழைக்கை
நற்குஞ்சரத்தின் பிடியோடு
அரசன்னம் நாண நடை
கற்கும் பதாம் புயத்தாளே
சகல கலாவல்லியே.

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய்
வாய்படைப் போன்முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்
டேனும் விளம்பினுன்போல்
கண்கண்ட தெய்வ முளதோ
சகல கலாவல்லியே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Cover Print by Pillaiyar Press, Kallur.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org